## நான் முருகன் பேசுகிறேன் கேட்கலயோ உங்களுக்கு?! முன்னால் தான் நிற்கிறேன் தெரியலயோ உம் கண்களுக்கு?!

பத்து மாதம் எனைச் சுமந்து இரவு பகல் கண் விழித்து சீராட்டி பாராட்டி நீராட்டி எனைப் பாலூட்டி வளர்த்ததை அன்று நான் அறியேன் அம்மா!பின்னாடி நான் வளர்ந்து உன் அன்புதனைக் கண்டு அத்தனையும் உடன் உணர்ந்து நித்தம் வியந்து நின்றேன் அம்மா!கோயில் குளம் நான் சென்று தெய்வம் தாள் தொழுது வரம் வேண்டி ஒருபோதும் நின்றேன் இல்லை அம்மா!வரம் வேண்டும் வகை குறை ஒன்றும் எனக்கு நீ வைத்தாய் இல்லையே அம்மா!

அப்பப்போ வறுமை எமைத் தொட்ட போது உள்ளதை எமக்களித்து வெற்று வயிற்றுடன் நீ படுக்கை போன போது ஒன்றும் புரியாத வயது பேசாமல் இருந்து விட்டேன்! முற்றத்து வேப்ப மரத்து மண்ணில் நானிறங்கி விளையாடயிலே மண்ணில் உனை விடுவேனா என்று ஓடிவந்து எனைத்தடுத்ததை எப்படி நான் மறப்பேன்?!

இப்படியோர் தாய் கிடைத்தால் இம்மண்ணில் எத்தனை பிறப்பும் நான் பிறப்பேன்! அடுத்த பிறப்பெமக்கிருந்தால் அதிலும் உன் மகனாய் நான் பிறக்க வேண்டும்! ஆனாலும் ஒன்று! அப்பிறப்பின் போதும் எம்மக்கள் துன்பம் துயர் தீரவில்லையேல் அப்பொழுதும் நான் நாட்டுக்காய்த்தான் உயிர் துறப்பேன்! அதிலேதும் தவறென்றால் உன்மகனை இப்பொழுதே அதற்காக மன்னித்து விடுங்கள் அம்மா!!

இருபத்தைந்து வயது சென்று இருபத்தாறுதனைக் கடந்து இருபத்தேழு ஆனபோதும் அப்பா ஏன் எனக்குக் கேட்காமலே காசு கொடுக்கிறார் என்று எனக்குள்ளே நான் எண்ணி சிலவேளை நானே சிரித்தும் இருக்கிறேன்! குறை ஒன்றும் எனக்கில்லை என வளர்த்து விட வேண்டும் என்று எண்ணிய உமக்கு நள்ளிரவு வேளையிலே யாருமில்லாக் காட்டினிலே சுடுகாட்டு மூலையிலே ஒற்றைக் கொள்ளி தனை வைத்திருந்தால் மட்டும் என் கடன் முடிந்திருக்குமோ?! மீண்டும் ஓர் பிறப்பெடுத்து என் மகனாய் உமைப் பெற்று உம் தேவையெல்லாம் தீர்த்து வைத்தாலன்றோ என் கடன் தீர்ந்து விடும்?!

சித்தி வீட்டுப் புளுதியிலே படலைக்கு மிக அருகினிலே

பொய்யாகப் பந்தலிட்டு குழி தோண்டி அடுப்பு வைத்து
சிரட்டையிலே கறி காச்சி சோற்றையும் உடன் ஆக்கி
விளையாட்டாய்ப் பரிமாறி நாலுபேரும் மகிழ்ந்திருந்தோமே
இப்போது அது நினைவிருக்கா?! பட்டம் ஒன்று கட்டி
வயல்வெளி நாம் சென்று ஏற்றி அன்று நிற்கையிலே
தானாக அது அறுத்து வெகுதூரம் தான் சென்று குளம்
ஒன்றில் வீழ்ந்து விட ஓடி அதை எடுக்கையிலே
அத்தனையும் கிழிந்து விட நாள் முழுதும் உண்ணாது
துக்கம் அனுஸ்ட்டித்தோமே நினைவிருக்கா?!

போளை சில நாம் வாங்கி வீட்டருகு ஒழுங்கை சென்று
அடித்து அன்று நிற்கையிலே ஒன்று அதில் வீணாக
உடைந்ததென்று அழுதிருந்தோம் நினைவிருக்கா?!
ஈச்சங்குலை பறித்து உப்பு நீர் கொஞ்சம் தெளித்து
வைக்கோரில் மறைத்து வைத்து விடியுமுன்னே
ஓடியதை எடுத்து உண்டிருந்தோமே நினைவிருக்கா?!
ஒரு கண் அணில் அரித்து விட இரண்டு எமக்கென்று
நொங்கு பொறிக்கிக் குடிப்போமே நினைவிருக்கா?!

பள்ளி செல்லும் வழி எங்கும் எம்பாட்டில் பாட்டுப்
படித்துச் செல்வோமே அதுவேனும் நினைவிருக்கா?!
இடையிடையே கொவ்வைப்பழம் கோவைப்பழம்
இலந்தப்பழம் அண்ணாஉணா பழம் பறித்து செல்கையிலே
காஞ்சுறோண்டி பட்டதென்று ஒருநாள் கலங்கி நின்றோமே
அதுவேனும் நினைவிருக்கா?! இத்தனையுடன் உங்களையும்
நான் இன்னும் மறக்கவில்லை! என் நினைவு தன்னைக்
கொஞ்சமும் இழக்கவில்லை!!

என்வயதில் என்னைப் போலவே உனக்கொரு மகனிருந்தால்
என் மீதான பாசம் போல் அவன் மீதும் வைத்திருப்பாய்
என்று நான் நினைக்கவில்லை சித்தி! உன் வீட்டில் நானிருந்த
நாட்களுக்கும் எனைப் பெற்ற தாயுடன் இருந்த நாட்களுக்கும்
ஒரு வேறுபாடு நானறியேன்! உன் மகன் போல் எனை
எண்ணி வளர்த்த உன் அன்பிற்கும் உன்னினிய பண்புக்கும்
இனி எப்பிறப்பில் என் கடன் தீர்த்திடுவேன்?!

வேலை வேறு இல்லையோ கோமதிக்கு?! உள்ள கோயிலில்
எல்லாம் என் பெயரில் இத்தனை அர்ச்சனை எதற்கு?!
ஊரிலுள்ள சாத்திரியிடமெல்லாம் இத்தனை சாத்திரம் தான்
எதற்கு?! என்று என்னுள் நான் நினைத்திருந்தேன்! ஆனாலும்
ஒருமுறை உனை வந்து பார்க்க வேண்டுமென்றே
எண்ணியிருந்தேன்! சந்தர்ப்பம் அதற்கெனக்குச் சரியாக

வரவில்லை! அதுதான் உன்னிடம் நான் அன்று வரவில்லை!!

ஏனோ நானறியேன் பெரிதாய் ஒன்றும் பேச நான் விரும்புவதில்லை! ஆனாலும் நான் உணர்வேன் உறவுகள் நட்புக்களுக்கு என்மீது ஒரு அன்பு இருந்ததென்று! அத்தனைக்கும் 'நன்றி' எனும் மூன்றெழுத்தில் ஓர் வார்த்தை சொன்னால் போதாதென்று நான் அறிவேன்! ஆனாலும் அதை விட வேறோர் வார்த்தை எனக்குத் தெரியவில்லை! அதனால் தான் சொல்கிறேன் அத்தனைக்கும் நன்றி என்று!!

உமையெல்லாம் தவிக்க விட்டு நான் சென்றது என்னமோ உண்மைதான்! செய்தி கேட்டு துடித்தழுது நீர் நின்றதும் உண்மைதான்! தாயகத்து கதறல் ஒலிகள் தினமும் என் காதில் வீழ்ந்தது! அழிக்கப்படும் எம் தேசம் கண் முன்னே தெரிந்தது! மெல்லவே எம்மினத்தின் பிணவாடை அடித்தது!

இவைகளே கனவிலும் காட்சிகளாய் வந்து நின்றது! இவை எண்ணியே என் மனது கொதித்தழுது நின்றது! அத்தனையும் என்னுள்ளே என்றோ தீ மூட்டிவிட்டது! என்னுயிரை என்றும் நான் பெரிதாய் எண்ணியதில்லை! அது உமக்குத் தெரியாததும் இல்லை! என் அற்ப உயிர் விட்டால் ஆங்கே ஆயிரம் குழந்தைகள் காக்கப்படுவார்கள் என்று எண்ணினேன்! வழிந்தோடும் செங்குருதி ஆறு தடுக்கப்படும் என்று எண்ணினேன்! வண்ண வண்ணப் புறாக்கள் அங்கு துள்ளி விளையாடும் என்று எண்ணினேன்!

உயிர்கொடுத்த என் தமிழ்த்தாய் அவள் தலைவாரி முகம் கழுவி பூச்சூடவெனப் பூர்த்திருக்கும் வண்ண மலர்ச் சோலைக்கு வானிலிருந்து ஆனந்தக் கண்ணீர் மழை சொரிந்து நிற்பேன் என எண்ணினேன்! என்ன செய்ய?! வெள்ளையனும் கல்நெஞ்சன் போலும்! கொஞ்சமும் மனம் உருகவில்லை! எம்மினத்தை மனிதம் என எண்ணிப் பார்க்கவுமில்லை! ஆனாலும் என்ன?! என்னுடலில் நானிட்ட தீயைக் காட்டிலும் உணர்வுள்ள நெஞ்சங்கள் அனைத்திலும் ஆறாது ஒரு தீப்பொறி தொற்றி இருப்பதை உணர்கிறேன்!

அதனால் தான் சொல்கிறேன் அத்தனையும் ஒருநாள் ஒன்று சேரும் போது சூழ்ந்திருக்கும் இவ் இருள் மெல்லனவே விலகிவிடும்! கொட்டமடிக்கும் கள்ளப் பகை உள்ள இடம் விட்டுத் தானே ஓடிவிடும்! தேடிவந்து மயில் இனம் தோகை விரித்தாடும் அங்கே! சுற்றி வந்து மீனினம் தமிழ்த் தேசிய கீதம் இசைக்கும் அங்கே! இந்தக் கண்ணீரும் செந்நீரும்

அக்கணம் வரும் வரைக்கும் மட்டுமே!!

முப்பது கடல் தாண்டி முன்னூறு மலை தாண்டி காட்டுவழி சில தாண்டி வெட்டைவெளி பல தாண்டி முள்ளிக் காடும் தாண்டி வானவெளிதனைத் தாண்டி நான் போன இடம் வெகுதூரம்! உற்றார் பலர் கண்டேன்! நண்பர் சிலர் கண்டேன்! கனகாலம் பார்க்கவில்லை! ஆதலால் அடையாளம் சரியாத் தெரியவில்லை! ஆவலுடன் எனைத் தேடி ஓடி வந்தார்!

வந்தெனைக் கட்டித் தழுவி எல்லோர் சுகமும் கேட்டு நின்றார்! விடுமுறைகள் ஆங்கே பெரிதாய்க் கிடைப்பதில்லை! கிடைத்தாலும் வந்து செல்லும் வலு உடலில் ஏனோ இருப்பதில்லை! வீட்டுச் சாப்பாடு பலநாள் இல்லையே காரணம் அதுதானோ எனக்குச் சரியாத் தெரியாது! ஆனாலும் முடிந்த போதெல்லாம் உமைத்தேடி நான் வருவேன்! அனைவருடனும் கதைத்துவிட்டுத் தான் நான் போவேன்!

போனமாதம் மதியமே நான் வந்துட்டன்! சரியான வெய்யில்! தாகம் அதிகமாயிற்று! கூடவே கொஞ்சம் பசியும் தான்! அடுப்படிக்குள் சென்று பார்த்தேன்! பாத்திரங்கள் கழுவப்பட்டு அழகாகவே அடுக்கப்பட்டும் இருந்தன! அங்கும் இங்கும் தேடிப்பார்த்தேன்! சாப்பாடு ஒன்றும் இருக்கவில்லை!

சமையல் அன்று தாமதம் போலும்! அல்லது நீங்கள் இப்போதெல்லாம் சமைப்பதில்லைப் போலும்! கையில் ஏந்திக் கொஞ்சம் நீர் குடித்துவிட்டு உம்மோடு பேச முன்னாடி வந்தேன்! எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னோட நிழற்படம் பார்த்து ஏதோ சொல்லி அழுத வண்ணம் தான் இருந்தீர்! எனை யாரும் பார்க்கவில்லை! அழாதீர்கள் என்று நான் சொன்னதைக் கேட்கவும் இல்லை! ஏன் நான் உங்கள் கண்ணில் படவில்லையா?! சொல்வது உண்மையில் கேட்கவுமில்லையா?!

உம் தோழில் தொட்டு ஆறுதல் கூற நினைத்தேன்! கையிலே தீக்காயம் நன்றாய்ப் பட்டுவிட்டது! கொஞ்சமும் இயங்க மறுத்தது! என் செய்வேன் நான் அதற்கு?! மாலையானதும் விட்டுப் போய்விட்டேன்! இன்று வர கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது! வேளைக்கே இருட்டி விட்டது! கதவு பூட்டப்பட்டுக் கிடக்கிறது! ஜன்னல் எல்லாம் சாத்தப்பட்டுக் கிடக்கிறது! வெளிச்சம் ஒன்றும் தெரியவில்லை! சத்தம் ஒன்றும் கேட்கவுமில்லை! நித்திரையில் நீர் போலும்! விடியும் வரை காத்திருக்க எண்ணினேன்! என்ன குளிர் இது?! தோலறுத்து என்பூடு புகுந்து மச்சை வரை தொட்டு என்னுடலை கொஞ்சம்

விறைக்க வைக்கிறது! கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது போலும்! எனை யாரோ பின்னின்று இழுப்பது போல் உணர்கிறேன்! என்னுடல் தானே மேலே பறக்க விளைவதை உணர்கிறேன்! பின் கதவைப் பற்றிப் பிடிக்கிறேன்! என்னால் முடியவில்லை!

இதற்கு மேல் இங்கிருக்க எனக்கு அனுமதியில்லை! அதுதான் இத்தனையும் எழுதி வைத்து விட்டுப் போகிறேன்! மழை வந்து என் எழுத்தைக் கரைக்காமல் இருக்கட்டும்! காற்றில் கடதாசி பறக்காமல் கிடக்கட்டும்! வாற மாதம் மூன்றாம் கிழமை மீண்டும் வர அனுமதி எனக்குண்டு! முற்பகலே வந்துடுவேன்! மூலையில நின்றிடுவேன்! ஒருமுறை எனைத் திரும்பிப் பார்த்திடுங்கள்!

என் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டிடுங்கள்! வேறென்ன?! எம்மக்கள் துயர் தீரும் வரை மெல்லெனக் குளிர் காற்று அங்கு வீசும் வரை என் ஆத்மாதான் சாந்தி அடைந்திடுமோ?! என் மனக் கவலைதான் தீர்ந்திடுமோ?! நேரமாகிவிட்டது! இப்போது சென்று மீண்டும் வருகிறேன்!!

இப்படிக்கு,
என்றும் உங்கள் அன்பின்,
பாசமிகு முருகன்.

பிற்குறிப்பு:- மரணத்தின் பின்பு முருகன் என்கனவில்தான் முதன்முதலில் வந்தான்! வார்த்தை சில பேசிவிட்டும் சென்றான்! ஆக நான் நினைக்கிறேன் என்னுடனோ அல்லது என்னூடாகவோ அவன் ஏதோ பேச நினைத்தான் என்று! ஆதலால் இதை அவன் தான் எனை எழுதவைத்தான் என்பதை நான் உணர்கிறேன்!

நன்றியுடன்,
உடன் பிறவா சகோதரன்,
செல்வா மணி.

## தங்கை புலம்பல்

வெள்ளீன்னும் பாராம விளக்கொண்ணும் ஏற்றாம
அண்ணன் வருவாண்ணு மீன்குளம்பு காச்சி வைச்சேன்!
இறக்கி வைச்ச மீன் குளம்பு வாசமது போகுமுன்னே-வானகம்
நீ சென்றதாக என் வீட்டுத் தொலைக்காட்சி சொன்னதண்ணா!
'லண்டனிலிருந்து வந்த ஈழத்து இளைஞன் முருகதாசன்
ஜெனிவாவில் ஐநாவின் முன்பு தீக்குளித்து நாட்டுக்காய்த்
தன்னுயிரைத் தியாகம் செய்துவிட்டார்....!' என்று!!
அக்கணம் எப்படி எல்லாம் நாம் துடித்தோம்
உயிர் போகும் வரை எப்படி உம் முகம் நாம் மறப்போம்?!

'மாமா உனக்கு என்ன வேண்டி வர' என்று-என் மகள்
கன்னந் தொட்டுக் கேட்டுவிட்டன்றோ சென்றாய்?!
ஒன்றும் வேண்டாம் விரைவில் நீ வந்துவிட்டால்
போதுமென்று என்மனதில் எண்ணினேனே!
வருவாய் நீயென்று வழிவழியே பார்திருந்தோம்!
செய்தியாய் ஏன் நீ வந்தாய்?!

கையெடுத்த தெய்வத்திடமெல்லாம்
படியேறிய கோயிலிலெல்லாம்
அண்ணன் வாழ்ந்தால் போதுமென்று
உனக்காகவே வரம் வேண்டி நின்றிருந்தேன்!
உன் வாழ்வைக் காட்டிலும்-எம்மக்கள்
வாழ்வே பெரிதென்று உன்னுயிர்
கொடுத்துச் சென்றாயே!
உன் இலட்சியம் நிறைவேற
உன் கனவுகள் நியமாக
உன் ஆத்ம சாந்திக்காய்-இன்று
உன்னையே தொழுது நிற்கிறேன்!

## சித்தி குடும்பம் புலம்பல்
## (குமாரசாமி கலாவதி கவிதா கஜானி)

இல்லை எமக்கொரு ஆண் பிள்ளை என்றெண்ணி
கலங்கியதில்லை நாம்! எம் முருகன் எமக்கிருக்கான்
வீட்டிலோர் விசேசம் வைக்க வேறென்ன வேண்டும் என்று
அவன் முன்னிற்க நாம் அவன் பின் நிற்க என்று கற்பனையில்
கோட்டை கட்டி மனத்திரையில் பந்தலிட்டுக் காத்திருக்க
தீயில் நீ வெந்து வானகம் சென்ற செய்தி வான் வழி
வந்ததுவே! வந்து அது எம் நெஞ்சைச் சுட்டதுவே!

என் தம்பி போன போது இப்படித்தான் இருந்தான் என்று
எத்தனை முறை உன் தலை கோதியிருப்பேன்?!
போகவிட்டு பின் நின்று உன் அழகைப் பார்த்திருப்பேன்?!
பாவியிவள் கண்தான் பட்டதுவோ?!
தீயாய் அது உன் உடலைச் சுட்டதுவோ?!
உனை எண்ணி நித்தம் நான் வாடி நிற்கிறேன்
கனவில் உனை தேடி நிற்கிறேன்
ஆத்ம சாந்திக்காய் வேண்டி நிற்கிறேன்!

விடுமுறையில் நாம் நின்றால்
நித்தம் எமைத் தேடி வருவீரே
ஏதேதோ வாங்கி வந்து
எம்மோடு பகிர்ந்துண்டிருப்பீரே
அண்ணா என்று இனி யாரை நாம் அழைப்போம்
உமை எண்ணி நித்தம் அழுது நிற்கிறோம்-உம்
ஆத்ம சாந்திக்காய் உம்மையே தொழுது நிற்கிறோம்!

## நண்பர்கள் புலம்பல்

அன்பிலோர் அணிகலனாய்
துணிச்சலில் சாகசக்காரனாய்
அதிகம் பேசாத போதும்- எத்துணை
துணை நின்றாய்- அத்தனையும்
எங்கு நாம் இனிக் காண்போம்?!
நாட்டுக்காய் இன்னுயிர் கொடுத்த மாவீரா
உன் நினைவுகளையும்
நீ கண்ட கனவுகளையும் சுமந்துகொண்டு
உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கிறோம்!

# விடுதலை என்ற இலட்சியத்தைச் சுமந்தவன் முருகதாசன்.

அன்றைய நாளை எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாது. அதுதான் ஈகப்பேரொளி முருகதாசனின் தியாகம் நிறைந்த நாள்...... நேற்றுப் போல் இருக்கின்றது. மனதில் இன்னும் அந்த ஆத்மாவின் நினைவு நிறைந்து கிடக்கின்றது.

நாட்கள் எவ்வளவு வேகமானது. முருகதாசனின் தியாகம் நேற்று நடந்ததுபோல் இருகின்றது. ஆனால் இன்றுடன் ஆறுமாதங்கள் கடந்தோடி விட்டன. எந்தனை மாதங்கள் என்ன எத்தனை ஆண்டுகள்தான் கரைந்தாலும் அந்த தியாகியின் நினைவும் எண்ணமும் எம் மனதில் இருந்து மறைந்துவிடப்போவதில்லை.

தமிழினத்தின் விடுதலைக்காக தன்னுயிரை துச்சமென நினைத்து உலக நாடுகளின் நாடி நாளங்களை ஆட்டம் காண வைத்து அதன் மூலம் தன்னினத்திற்கு விடிவு கிடைக்கும் என அவன் தன்னை அழித்துக் கொண்டான். அதுவும் உலக நாடுகளின் மைய மன்றமான ஐ.நாவுக்கு முன்னால் ஆனால் அந்த நாடுகள் அவனின் அந்த தியாகத்தை கண்திறந்து கூட பார்க்கவில்லை. இது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம்தான். இருந்தாலும் மாறாக அவனின் தியாகம் தமிழ் மக்களை ஒரணிப்படுத்தி ஒன்றுசேரவைத்துவிட்டது. அதுமாத்திரமில்லாமல் அவனின் தியாகம் மக்களின் மனங்களில் பெரும் ஆழமாய் பதிந்திற்று.

நாம் எத்தனையோ தியாகிகளை இழந்திருக்கின்றோம். எத்தனையோ விடுதலை வீரர்களை இழந்திருக்கின்றோம் ஆயிரக்கணக்கில் மக்களை இழந்திருக்கின்றோம். எல்லாமே எம்மினத்திற்கான இழப்புகள்தான். எதையுமே குறைத்து மதிப்பிட முடியாத பெறுமதி மிக்க உயிர்கள். ஆனால் ஈகப்பேரொளி முருகதாசனின் இழப்பு என்பது வரலாற்றில் பதியப்பட்டதொன்று. விடுதலை வீரர்களைப்போல.

அவன் புலம் பெயர் நாட்டில் வாழ வந்தவன். தன்பெற்றோர் உடன் பிறப்புகள் உறவினர்கள் என சகல சொந்த பந்தங்களுடனும் வாழ்ந்தவன். அவன் வாழ்ந்தது ஒரு அழகிய வாழ்க்கை. எனினும் அவனின் ஆழ் மனதில் விடுதலை என்ற பெரும் ஊற்று ஆழமாய் பாய்ந்திருந்தது. தமிழ் தேசத்திற்காய் பல கடமைகளைச் செய்தவன். தன் மக்கள் தமது சொந்த மண்ணில் ஈவிரக்கமற்ற முறையில் சிங்களப் படையினால் தொடர்ந்து கொல்லப்படுவதையும் ஊனப்படுத்தப்படுவதையும் கண்டும் அறிந்தும் அதை ஏற்றுக் கொள்ளமுடியாது தவித்தவன். இறுதியில் தன் மக்களின் நிலையை உலக நாடுகளின் முன் வைத்து அதன் மூலம் நீதி கேட்டு தீக்குளித்தவன்.

அவனின் அன்றைய தீக்குளிப்புச் செய்தி கேட்டு நான் ஆடித்தான்போனேன். நான் மாத்திரமல்ல உலகத்தமிழினமே ஆடித்தான் போனது. பெற்றோர் சொந்த பந்தங்களுக்கு மாத்திரம் அவனின் இழப்பு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் பாதிப்புத்தான். ஆனால் அவன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக தீக்குளிக்கவில்லை. தனது இனத்திற்காக இனத்தின் விடுதலைக்காக தன்னுயிரை தாரைவார்த்தவன். அதுவும் அக்கினி சாட்சியாக. இந்த தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை. அவனின் இலட்சியம் நிட்சயம் வெல்லும். அதற்காக நாம் எமது மக்கள் தொடர்ந்து உழைக்க வேண்டும்.

தோல்விகள் நிரந்தரமற்றது. அதற்குப்பின்னால் பலமான வெற்றி தங்கியுள்ளது. அந்த வெற்றிக்காக நாம் உழைப்போம். முருகதாசனின் ஏன் எமது நாட்டுக்காக உயிர் நீத்த அத்தனை ஆத்மாங்களின் விருப்பமும் நோக்கமும் அதுதான். அந்த நோக்கத்திற்காக இலட்சியத்திற்காக நாம் தொடர்ந்து உழைப்பதே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும். அப்போதுதான் அந்த ஆத்மாக்களுக்கு நிரந்தர அமைதி ஏற்படும். ஈகப்பேரொளி முருகதாசனின் இந்த ஆறாவது மாத நினைவு நாவில் அவனுக்காக அஞ்சலி செலுத்துகின்றேன். அவனின் இலட்சியம் வெல்லும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளேன். அவனை ஈன்றெடுத்த பெற்றோர் உடன் பிறப்புக்கள் அனைவருக்கும் எனது வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.ஜெயானந்தமூர்த்தி
பாராளுமன்ற உறுப்பினர்
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
மட்டக்களப்பு மாவட்டம்

# புலம்பெயர் மண்ணின் முதலாம் தற்கொடையே!

புலம்பெயர் மண்ணில்
ஜெனிவாப் பெருநகரில்
ஐ.நா. முன்றலிலே
உண்மைய்க்காய் உயிர் தந்த
முதலாம் தற்கொடையே
முருகதாசே!

உன் முகமறியேன் - ஆனால்
உன் உணர்வைப்
புரிந்து கொண்டேன்....

சாவதென்று முடிவெடுத்த
எத்தனைபேர் - மறுகணமே
எதையெதையோ எண்ணி
தம் முடிவை மாற்றிடுவார்.

ஆனால் நீ!
தன்னந் தனியனாய்
இலண்டனில் இருந்து
வந்திறங்கியிருக்கிறாய்..

நீதிகெட்ட உலகு
புரிந்து கொள்ளும்படி
தமிழன் வரலாற்றைத் தொட்டு
தடம் மாறாமல்
நியாயங்களை நிரைப்படுத்தி
உறைப்பாய் உரைத்து
எழுதியிருக்கிறாய்...

நீ பிறப்பெடுத்ததே
தமிழிற்காய் என்பதாய்
உனதுயிரை
ஐ.நா. முன்றலிலே
தீயில் எரித்து வைத்தாய்....
நீ
எரிந்து போகவில்லை
தமிழர் உள்ள தேசமெங்கும்
விரிந்து போனாய்...
உலகின்
மனச் சாட்சியில்
விழுந்து விட்ட
பேரிடியானாய்...

நீ
நாதியற்றுப்போய்
கையறு நிலையில்
மரணித்தாய் என்று
எதிரியும் சொல்லமாட்டான்

உனது மரணத்தால்
தமிழர் படும் வேதனையை
உலகிற்குச் சொல்வதற்கு
பெரிதாய் ஒரு கைகொடுத்தாய்...

உண்டகையின்
ஈரம் உலருமுன்
இரண்டகம் புரிவோர்
வாழும் உலகிலே
கண்டம் கடந்து நீ
வாழ்ந்திட்ட போதிலும் - உன்
எண்ணம் யாவுமே - தமிழ்
ஈழத்தில் நிறுத்தினாய்...

ஐ.நா. முன்றலில்
மரணவேதனையில் - நீ
உருண்டு புரள்கையில்
உன் உடலின்
தசைத் துண்டுகள்
வீதிகளில் கிடந்ததை
பார்த்த தமிழ் மக்கள்
கொதித்துப் போனார்கள்.

உன்னை வணங்குகிறேன் - உன்
தியாகத்தைப் போற்றுகின்றேன்
ஆனால்,
இனிமேலும் இதுபோல
யாரேனும் மடிவதனை
ஏற்கவில்லை...

## Cllr Thaya Idaikkadar


13 Cambridge Road
North Harrow
Middlesex
HA2 7LA


One could look at the situation in Srilanka now and say Mr Murugathas wasted his life on a lost cause. You could not be more wrong. When he decided to take his life world media did not pay any attention at all to the events in Srilanka. This event ignited the whole world events. All of sudden National and International media started to flock to his house and wanted every single detail. South India reacted the way it never reacted in the past. In short through his sacrifice he put the Srilankan Tamils plight in the political map.

The very fact that a number of MPs and Councillors turned up and made speeches at his funeral proves the significance the world leaders have attached to his sacrifice. No less than 20,000 people turned up to pay their last respects to Mr Murugathas. Probably the third largest in the Country in the last 20 years or so.

The flame that ignited his body ignited all our minds and helped to focus the issues that concerned our brothers and sisters. The flame will burn in our hearts until the Tamils achieve self determination. The hollow victory achieved by the Government is temporary. They won the land but not the minds and souls of Tamils every where in the world.

If the pain in our minds is unbearable but the pain in his family's hearts is many fold. We can not even begin to understand the suffering they will go through for a long time to come.

The only way we can help the family to come to terms is to get united and fight tooth and nail for self determination to our people. Once the solidarity is gone then we would have lost every thing and failed Mr Murugathas.

Cllr Thaya Idaikkadar

